**பொது மக்களுக்கான அறிவித்தல்**

**தெரிவுப் பரீட்சை – சட்டமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டம்**

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

14.11.2021 அன்று நடைபெற்ற இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டமாணிப் பட்ட தெரிவுப் பரீட்சை தொடர்பாக 14/11/2021 மற்றும் 15/11/2021 ஆகிய திகதிகளில் இலத்திரனியல் ஊடகத்தில் ஒளிபரப்பப்பட்ட செய்தி தொடர்பானது.

மேற்குறிப்பிடப்பட்ட தெரிவுப் பரீட்சையானது இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை பரீட்சைத் திணைக்களம் என்பவற்றிற்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைக்கு இணங்க பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்டது என்பதை நாம் பொது மக்களுக்கு அறியத்தர விரும்புகிறோம். இந்த உடன்படிக்கையின் ஏற்பாட்டின்படி வினாத்தாளினை தயாரிப்பதற்கும் குறித்த பரீட்சையினை நாடளாவிய ரீதியில் நடத்துவதற்கும் இலங்கை பரீட்சைத் திணைக்களமே தனியான அதிகாரம் பெற்ற அமைப்பாகும்.

இது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் வினவியபோது, இவ் விடயம் தொடர்பாக ஆராய்வதற்கு முழுமையான விசாரணைகளை ஆரம்பிக்க இருப்பதாக எமக்கு தெரிவிக்கப்பட்டது.

**பதிவாளர்**
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
2021.11.16